# மாபெரும் கட்டுரைப் போட்டி..

அன்புடையீர்,

தங்கள் மீதும், தங்கள் குடும்பத்தார் மீதும் இறைவனின் சாந்தியும், சமாதானமும் நிலவட்டுமாக. இக்கடிதம் தங்களை பூரண உடல் நலத்துடன் சந்திக்கும் என்று நம்புகிறோம்.

எங்களது கீழைநியூஸ் இணையப்பத்திரிக்கை **ஒரு வருடத்தை** பூர்த்தி செய்யும் இவ்வேளையில், எங்கள் நிர்வாகம் சார்பாக பின் வரும் தலைப்புகளில் கீழக்கரை பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் குடும்ப இல்லதரசிகளுக்கான கட்டுரைப் போட்டி நடத்த இருக்கிறோம். ஆகையால் இக்கட்டுரைப் போட்டியில் அனைவரும் கலந்து கொள்ளும் படி அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

## பள்ளி மாணவ, மாணவிகளுக்கான தலைப்புகள்

- *நாட்டின் சமூக நல்லிணக்கமும், நமது பொறுப்பும்..*
- *சமூக வலைதளங்கள் சமுதாயத்தின் வளர்ச்சியா? வீழ்ச்சியா??*

## இல்லத்தரசிகளுக்கான தலைப்புகள்

- **தம்பதிகளின் மணமுறிவுகளும், தடுக்கும் வழிமுறைகளும்...**
- **இன்றைய நவீன உலகில் பெண்கள் நிலை.**

இப்போட்டியில் வெற்றி பெறும் முதலாமவர் ஒருவருக்கு இந்திய ரூபாய். 2,000/- பரிசாகவும், இரண்டாமவதாக வரும் இரண்டு பேருக்கு இந்திய ரூபாய். 1,000/- பரிசாகவும் மூன்றாமவதாக வரும் மூன்று பேருக்கு ரூபாய். 500/- பரிசாகவும், ஆறுதல் பரிசாக பத்து பேருக்கு ரூ. 100/- பரிசாக வழங்கப்படும். இத்துடன் கீழை நியூஸ் சார்பாக சான்றிதழ்களும் வழங்கப்படும். இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 9715715786 / 9514171867 / 9566435352 மொபைல் எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

*இப்படிக்கு,*

**தங்களின் அன்பான ஆதரவை விரும்பும்.**
**கீழைநியூஸ் நிர்வாகம்.**

**(Managed By:- Keelai Media & Advertisement Pvt.**

# விதிமுறைகள்

- அடித்தல், திருத்தல் இருக்க கூடாது. கட்டுரையில் மேற்கோள் காட்டப்படும் சம்பவங்கள் ஆதாரபூர்வமனதாக இருக்க வேண்டும்.
- எந்த தனி நபரையோ, அமைப்புகளையோ, அரசியல் கட்சிகள், ஜாதிகள் மற்றும் மார்க்கங்களை சாடியோ, புண்படுத்தும் வகையிலோ கட்டுரைகள் இருக்க கூடாது.
- மூன்று தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்பு மட்டும் எடுத்து கட்டுரை சமர்ப்பிக்க வேண்டும். கட்டுரை **A4** அளவில் நான்கு பக்கத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- இப்போட்டியில் கீழக்கரை, காஞ்சிரங்குடி, மாயாகுளம் மற்றும் ஏர்வாடி பகுதி பள்ளிகள், மதரசாக்கள் கலந்து கொள்ளலாம்.
- **8ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு படிக்கும் மாணவ, மாணவிகள்** மற்றும் கீழக்கரை சுற்றுவட்டாரத்தைச் சார்ந்த அனைத்து இல்லதரசிகளும் கலந்து கொள்ளலாம்.
- பள்ளி மாணவ, மாணவிகள் தங்கள் எழுதிய கட்டுரைகளை பள்ளி, மதரசா தலைமை ஆசிரியர், ஆசிரியை முலம் கீழை நியூஸ் நிர்வாக அலுவலகத்துக்கு அனுப்பவும் அல்லது பள்ளிக்கூட ஆசிரியர் அல்லது ஆசிரியை ஒப்புதல் பெற்று **கீழை நியூஸ், 5/192, கிழக்குத் தெரு, (அப்பா பள்ளி எதிரில்), கீழக்கரை - 623 517** என்ற முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ சமர்பிக்கலாம்.
- பள்ளி மாணவ, மாணவிகள் கட்டுரையை சமர்ப்பிக்கும் கவரில் பெயர், படிக்கும் வகுப்பு, பள்ளியின் பெயர், கட்டுரையின் தலைப்பு ஆகியவை தெளிவாக எழுதி சமர்பிக்க வேண்டும்.
- ஒரு மாணவர் அல்லது மாணவி ஒரு முறை மட்டுமே கட்டுரை சமர்பிக்க முடியும்.
- பரிசு வெல்லும் மாணவ, மாணவிகளின் பெயர்கள் பள்ளி நிர்வாகம் மூலம் தெரிவிக்கப்பட்டு, கீழை நியூஸ் இணையதளத்திலும் தொடர்ச்சியாக வெளியிடப்படும்.
- இல்லதரசிகள் தங்களின் படைப்புகளை **கீழை நியூஸ், 5/192, கிழக்குத் தெரு, (அப்பா பள்ளி எதிரில்), கீழக்கரை - 623 517** என்ற முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ சமர்பிக்கலாம்.
- நேரடியாக சமர்பிக்க முடியாதவர்கள் keelainewsco@gmail.com என்ற முகவரிக்கு ஸ்கேன் செய்து, கையொப்பம் இட்டு அனுப்பலாம்.
- கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் **31-01-2018** **(ஜனவரி 2018, 31ம் தேதி, புதன் கிழமை).**
- வெற்றி பெறும் இல்லதரசிகளின் கட்டுரை அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் பெயருடன் இணையதளத்தில் வெளியிடப்படும்.
- இக்கட்டுரை போட்டி கீழை நியூஸ் நிர்வாகத்துடன் **சத்தியப்பாதை கல்வி தர்ம அறக்கட்டளை, கீழக்கரை இஸ்லாமிய அமைதி நிலையம் (KIPC) மற்றும் நிஷா ஃபவுன்டேசன்** ஆகியோரால் இணைந்து நடத்தப்படுகிறது.
- கட்டுரையின் இறுதி முடிவு கீழைநியூஸ் நிர்வாத்தினரால் மட்டுமே முடிவு செய்யப்படும்.